

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(2007 – 2008)

(பதினைமூன்றாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்து ஐந்தாவது அறிக்கை

தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் மதுரை மாவட்டங்கள்

(மாவட்டப் பட்டியல்)

TRUTH ALONE TRIUMPHS
7 MAY 2008

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள்:

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(2007 – 2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்து ஐந்தாவது அறிக்கை

தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் மதுரை மாவட்டங்கள்

(மாவட்டப் பட்டியல்)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

பொருளடக்கம்

		பக்கங்கள்
குழுவின் அமைப்பு	..	ii

அறிக்கை

1. முகவுரை	..	v
2. குழுவின் கூட்டங்கள்	..	v
3. குழுவின் ஆய்வுப் பயணங்கள்	..	vii-xxvi
4. பொதுக் குறிப்புரைகள்	..	xxvi-xxvii

இணைப்பு–1

1. 2007–2008–ஆம் ஆண்டிற்கான குழுவால் நிறைவேற்றப் பெற்றனவாகவும் / படித்துப் பதிவு செய்யப்பெற்றனவாகவும் கருதப்பெற்ற உறுதிமொழிகளின் விவரம்:–

i. தூத்துக்குடி மாவட்டம்	..	1–40
ii. விருதுநகர் மாவட்டம்	..	43–54
iii. மதுரை மாவட்டம்	..	56–74

இணைப்பு–2

2. குழுவின் பரிந்துரை	..	75–

இணைப்பு–3

3. குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்	..	76–77

2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் அமைப்பு

(15.5.2007 அன்று அமைக்கப் பெற்றது)

தலைவர் :

1. திரு. தி. வேல்முருகன்

உறுப்பினர்கள்:

2. திரு. அன்பில் பெரியசாமி
3. திரு. கே.எல். இளவழகன்
4. திரு. சு. குணசேகரன்
5. திரு. அ. சௌந்திரபாண்டியன் (குன்னூர்)
6. திரு. அ. சௌந்திரபாண்டியன் (லால்குடி)
7. திரு. பி. பலராமன்
8. திரு. கு. பாண்டுரங்கன்
9. திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி
10. திரு. எச். வசந்தகுமார்
11. திருமதி ராணி வெங்கடேசன்
12. திருமதி ஜி. லதா

செயலகம்

திரு. மா. செல்வராஜ்	:	செயலாளர்
திரு. வெ.சி. சுப்ரமணியன்	:	கூடுதல் செயலாளர்
திரு. தி. கோவிந்தராசு	:	துணைச் செயலாளர்
திரு. க. பாலசுப்ரமணியன்	:	சார்புச் செயலாளர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு (2007–2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

பெறுநர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,
சென்னை–600 009.

முகவுரை

1. 2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை) இருபத்து ஐந்தாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டங்கள்

2. குழு 2007–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18,19 மற்றும் 20 ஆகிய தேதிகளில் தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் ஆய்வுப்பயணம் மேற்கொண்டது. அவ்வமயம் தூத்துக்குடி துறைமுக சேமிப்புக்கிடங்கு, உயர் திறனுள்ள எடை மேடை அமைப்பது, தூத்துக்குடியில் நிலக்கரியை எரிபொருளாகக் கொண்டு 1000 மெகாவாட் திறனுடைய புதிய அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம், தூத்துக்குடியில் 510 மெகாவாட் திறன்கொண்ட அனல்மின் நிலையம் அமைப்பது, தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகத்திற்குச் சொந்தமான ரோச்பூங்கா, தூத்துக்குடி பழைய பேருந்து நிலையம், தூத்துக்குடி புதிய பேருந்து நிலையம், தூத்துக்குடி 3–ஆம் கேட் இரயில்வே மேம்பாலம், தூத்துக்குடியில் உள்ள பக்கிள் ஒடைத்திட்டம், தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார் திருநகரி என்னும் இடத்தில் அமைந்துள்ள ஜி.டி.ஜி. நடுநிலைப்பள்ளி, ஆரம்ப சுகாதார நிலையம், தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி செய்துங்கநல்லூரில் காவலர் குடியிருப்புக் கட்டுதல், விருதுநகர் புதிய பேருந்து நிலையம், விருதுநகர் அரசு மருத்துவமனை, விருதுநகர் பாதாள சாக்கடைத் திட்டம், விருதுநகர் பழைய பேருந்து நிலையம், விருதுநகர் மாவட்டம் ஆமத்தூரிலுள்ள துணை ஆரம்ப சுகாதார நிலையம், ஆமத்தூர் பொது விநியோகக்கடை, ஆமத்தூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், சிவகாசி தீயணைப்பு நிலையம், அரசு மருத்துவமனை

சிவகாசி, தமிழ்நாடு அரசு சிமெண்ட் நிறுவனம், ஆலங்குளம், மதுரை ஆவின்பால் பண்ணை, மதுரை அண்ணா பேருந்து நிலையம் அருகில் கட்டப்படவிருக்கும் இராஜாஜி மருத்துவமனைக்கான கூடுதல் கட்டிடங்கள், அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை திருமலை நாயக்கர் மஹால், தீயணைப்பு நிலையம், மதுரை இரயில்வே மேம்பாலம், மதுரை பெரியார் பேருந்து நிலையம், மதுரை பொது விநியோகக் கடை, மதுரை எல்லீஸ் நகரில் பேருந்து நிலையம் அமைத்தல், மதுரையில் பாதாள சாக்கடைத் திட்டம் துரிதப்படுத்துவது, ஆரம்ப சுகாதார நிலையம் சமயநல்லூர், சமயநல்லூரில் துணைக்காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டுதல், மதுரை மாவட்டம் வாடிப்பட்டி கிராம நிர்வாக அலுவலகம், மதுரை மாவட்டத்தில் மூன்றாவது நெசவுப்பூங்கா தொடங்குவது, வாடிப்பட்டி சாத்தையாறு அணை மற்றும் அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை ஆகிய இடங்களை குழு பார்வையிட்டது.

3. மேற்சொன்ன மாவட்டங்களில் குழு ஆய்வுப்பயணம் மேற்கொண்டபோது பேரவையில் அமைச்சர்களால் அளிக்கப்பெற்ற உறுதிமொழிகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய 220 உறுதிமொழிகள் மீதான அறிக்கைகளை குழு ஆராய்ந்து அவற்றில் 54 உறுதிமொழிகள் நிறைவேற்றப்பெற்றனவாகவும், 8 உறுதிமொழிகளுக்கான பதில்களை படித்துப் பதிவு செய்யப்பெற்றனவாகவும், 1 உறுதிமொழி பரிந்துரை செய்யப்பெற்றனவாகவும், எஞ்சியுள்ள 157 உறுதிமொழிகள் மீது நடவடிக்கைத் தொடரலாம் என்றும் முடிவு செய்யப்பெற்றது.

4. மேற்படி கூட்டங்களில் நிறைவேற்றப்பெற்றவை அல்லது படித்துப் பதிவு செய்யப்பெற்றவை எனக் கருதப்பெற்ற உறுதிமொழிகளின் விவரங்கள் இணைப்பு–1இல் உள்ளன. குழுவின் பரிந்துரைகள் இணைப்பு–2 இல் உள்ளன. குழு சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் கூடிய நாட்கள் பற்றிய விவரங்கள் இணைப்பு–3–இல் உள்ளன.

குழுவின் ஆய்வுப் பயணங்கள்

5. கீழ்க்காணும் உறுதிமொழிகள் தொடர்பாக குழு 2007–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18, 19 மற்றும் 20 ஆகிய தேதிகளில் தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் மதுரை மாவட்டங்களில் ஆய்வுப்பயணம் செய்து உறுதிமொழிகள் நிறைவேற்றப்பெற்றனவா என்று பார்வையிட்டதுடன் அவ்வுறுதிமொழிகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியது. குழு நேரடியாக பார்வையிட்ட சில உறுதிமொழிகள் குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:–

1. உறுதி மொழி எண்.518 / 2003:– **"தூத்துக்குடி துறைமுக சேமிப்புக்கிடங்கில் உயர் திறனுள்ள மின்னணு எடை மேடை அமைப்பது குறித்து".**

குழு தூத்துக்குடி துறைமுக சேமிப்புக் கிடங்கு வளாகத்தில் அமைந்துள்ள தனியார் அமைத்துள்ள உயர் திறனுள்ள மின்னணு எடை மேடையைப் பார்வையிட்டது. திரு.முத்து, டிராபிக் மேனேஜர் குழுவினரை வரவேற்று கீழ்க்கண்ட விவரங்களை குழுவிற்கு விளக்கினார்.

ஒரு நாளைக்கு 120 முதல் 150 லாரிகள் வருவதாகவும், 20 டன்னுக்கு ரூ.15/–வசூலிப்பதாகவும், ஒரு நாளைக்கு சுமார் ரூ.10,000 வசூலாகின்றதாகவும், 30 வருடம் லீசுக்கு இந்த இடத்தை தனியாருக்கு தூத்துக்குடி துறைமுகக் கழகம் அளித்துள்ளதாகவும், வருடத்திற்கு 3 இலட்ச ரூபாய் சராசரியாக துறைமுகக் கழகத்திற்கு செலுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குழு இன்றைக்கு தூத்துக்குடி துறைமுக சேமிப்புக் கிடங்குகளில் உயர் திறனுள்ள மின்னணு எடைமேடை அமைப்பது குறித்து உறுதிமொழி தொடர்பாக Golden Electronic Weigh Bridge என்னும் தனியாரால் அமைக்கப்பட்டுள்ள மின்னணு எடைமேடையை பார்வையிட்டது. இங்கே பணியுரிகின்ற அலுவலர் ஒரு நாளைக்கு 150 லாரிகள் வரை வருவதாகவும், ஒரு நாளைக்கு ரூ.10,000/–வரை வசூல் செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டது 30 ஆண்டுகளுக்கு வசூல் செய்ய இந்த நிறுவனத்தோடு துறைமுகக்கழகம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஒரு நாளைக்கு ரூ.10,000 என்றால் மாதத்திற்கு ரூ.3 இலட்சம்

என்ற அளவில் இந்த நிறுவனம் சம்பாதித்து இரண்டு வருடங்களுக்குள்ளேயே இந்நிறுவனம் துறைமுக கழகத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை கட்டிவிடுகிறார்கள். அதற்குபிறகு வரூலாவது இவர்களது லாபம்தான். இவர்கள் 30 வருடங்களுக்கு கழகத்திற்கு கட்டுவது 75 இலட்சம்தான். அரசுக்கு வாவேண்டிய பலகோடி ரூபாய் தனியார் நிறுவனத்திற்கு செல்லுகிறது. மேலும், கழகத்தின் மேலாண்மை இயக்குநர் அளித்துள்ள பதிலில்கூட தனியார் எடைமேடை உள்ளதால் தேவையில்லை என்று தெரிவித்திருக்கிறார். எனவே, இந்த வளாகத்தில் அரசின் சார்பாக ஒரு மின்னணு எடை மேடையை அமைக்க அரசுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

குழுவின் கூட்டம் சென்னையில் கூடுகிறபோது துறைமுக பொறுப்புக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், துறைச்செயலர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரில் அழைத்து குழு ஆய்வு செய்யும் என முடிவு செய்கிறது என தலைவர் தெரிவித்தார்.

2. உறுதி மொழி எண்.475 / 2003:– "தூத்துக்குடியில் நிலக்கரியை எரிபொருளாகக் கொண்டு 1000 மெகாவாட் திறனுடைய புதிய அனல்மின் நிலையம் திட்டம் அமைப்பது குறித்து".

இவ்விடத்தை பார்வையிட சென்ற குழுவினரை தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கண்காணிப்புப் பொறியாளர் திரு.பி.வடிவேலு, அவர்கள் வரவேற்று கீழ்க்கண்டவாறு விளக்கினார்.

நிலக்கரியை எரிபொருளாக கொண்டு 1000 மெகவாட் திறனுடைய புதிய அனல்மின் நிலையம் அமைக்கும் திட்டத்தினை தமிழ்நாடு மின்சார வாரியம் இந்திய அரசு நிறுவனமான நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகத்துடன் கூட்டாகச் சேர்ந்து அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வரின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் 19.06.2003 அன்று கையெழுத்து இடப்பட்டுள்ளது. தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத்திற்கு சொந்தமாக 108

ஹெக்டேர் நிலம் இத்திட்டத்திற்கு கண்டறியப்பட்டு நீண்டகால குத்தகையின் அடிப்படையில் ஒப்படைப்பெற்று ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு 4,900 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 11–வது திட்ட காலத்திலேயே மின் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடியில் நிலக்கரியை எரிபொருளாகக் கொண்டு 1000 மெகாவாட் திறனுடைய புதிய அனல்மின் நிலையம் அமைக்கும் திட்டத்தினை குழு இன்றைக்கு ஆய்வு செய்தது. 4000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய இத்திட்டத்திற்கு 4,900 கோடி ரூபாய் தேவை என்று கண்காணிப்புப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டது. மக்கள் வரிப்பணம் ஏழை எளிய மக்களுக்கு போய் சேர வேண்டிய பணத்தில் கூடுதலாக 900 கோடி ரூபாய் இத்திட்டத்தினை நிறைவேற்ற காலதாமதம் ஏற்பட்டதால் இழப்பு ஏற்பட்டுள்ளதை நினைத்து குழு வருந்துகிறது. இருந்தாலும் முதன்மைப் பொறியாளர் அவர்களும், துறைமுகத்துடைய செயலாளர் அவர்களும், மின்வாரிய தலைவர் அவர்களும், நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் அதிகாரிகளோடு இணைந்து பணியாற்றி இத்திட்டத்தினை விரைந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு கேட்டுக்கொண்டது. குழுவின் கூட்டம் சென்னையில் நடைபெறுகிறபோது மின்வாரியத் தலைவர், துறைச் செயலாளர் மற்றும் இதர அதிகாரிகளை நேரில் அழைத்து இந்தத் திட்டத்தினை நிறைவேற்ற குழு பரிந்துரை செய்யும்.

3. உறுதி மொழி எண்.781 / 2003:– "தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் தூத்துக்குடியில் 510 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் நிலையம் திட்டம் (சூப்பர் தெர்மல்) அமைப்பது குறித்து"

தூத்துக்குடியில் 510 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் நிலையம் திட்டம் அமைப்பது குறித்த இடத்தை குழு பார்வையிட சென்றபோது திரு.பி.வடிவேலு, கண்காணிப்புப் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் குழுவினை வரவேற்று கீழக்கண்டவாறு விளக்கினார்.

மின்சாரத்தின் தேவை நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டே வருவதால், தமிழ்நாடு மின்சார வாரியம் ஏற்கனவே நிறைவேற்ற உத்தேசித்திருந்த 510 மெகாவாட் அனல்மின் திட்டத்திற்குப் பதிலாக இரண்டு 500 மெகாவாட் திறன்கொண்ட திட்டங்களை நிறைவேற்ற உத்தேசித்துள்ளது என்றும் இதற்கான அடிக்கல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 02.07.2007 அன்று நிறுவப்பட்டது என்றும் 95 ஹெக்டேர் நிலம் தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத்திடமிருந்து நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றப்பட்டுள்ளது என்றும் திட்ட விவரக் குறியீடு தயாரிப்பதற்காக கோரி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு தற்போது அவை பரிசீலனையில் உள்ளது என தெரிவிக்கப்பட்டது.

தற்போது தமிழ்நாட்டில் அடிக்கடி மின்வெட்டு ஏற்படுகிறது என்றும் மின்சாரத்தின் தேவையும் அதிகரித்துக்கொண்டே வருகிறது என்றும், எனவே உடனடியாக மின்வாரியத் தலைவர் அவர்களும், துறையின் செயலாளர் அவர்களும் மத்திய அரசை தொடர்பு கொண்டு உடன் இத்திட்டத்திற்கான அனுமதியைப் பெற்று விரைவாக இந்த திட்டத்தினை தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு கேட்டுக்கொள்கிறதென்றும், இத்திட்டத்தினை செயல்படுத்த காலதாமதம் ஏற்பட்டால் மதிப்பீடு அதிகரிக்க வாய்ப்பிருக்கிறதென்றும், எனவே இத்திட்டத்தினை விரைந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் குழு கேட்டுக்கொள்கிறது என்றும் சென்னையில் குழு கூடும்போது மின்சார வாரியத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களையும் மற்றும் துறைச் செயலாளர், தலைமைப் பொறியாளர் மற்றும் இதர அதிகாரிகளை குழு நேரில் அழைத்து விசாரிக்கும் என்று குழுத் தலைவர் தெரிவித்தார்.

4. உறுதி மொழி எண்.42 / 2004:– "தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தூத்துக்குடியிலுள்ள ரோச் பூங்காவில் படகு இல்லம் அமைப்பது குறித்து"

தூத்துக்குடியிலுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ரோச் பூங்காவில் படகு இல்லம் அமைவிருக்கும் இடத்தினை பார்வையிட சென்ற

குழுவினரை தூத்துக்குடி நகராட்சி ஆணையர் வரவேற்று கீழ்க்கண்டவாறு குழுவிற்கு விளக்கினார்.

ரோச் பூங்கா என்னும் இந்த இடமானது தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகத்திற்கு சொந்தமானதாகும். 99 வருட ஒப்பந்த அடிப்படையில் நகராட்சியால் இந்த இடம் பராமரிக்கப்பட்டு வருகிறதென்றும் சுற்றுலா துறைமூலம் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள 95 இலட்சம் ரூபாய் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகரமன்றத்தின் அனுமதிபெற்று 15.11.2007 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் சுற்றுலாத் துறை ஆணையருக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டது.

தூத்துக்குடி நகராட்சிக்குச் சொந்தமான ரோச் பூங்காவில் படகு குழாம் அமைக்க 44 இலட்சம் ரூபாய் செலவாகும் என்றும் பூங்கா அமைக்க 10 இலட்ச ரூபாய் செலவாகும் என்றும் மொத்தமாக 95 இலட்ச ரூபாயில் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றும் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. நகராட்சி அதிகாரிகள் மற்றும் துறைமுக சபை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஒரு கலந்தாய்வு கூட்டத்தை கூட்டி உடனடியாக இந்த பணிகளை தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு கேட்டுக்கொள்கிறது என்றார்.

சென்னையில் குழு கூடும்போது சுற்றுலாத் துறையின் இயக்குநர் துறையின் செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து பரிந்துரை செய்யும் என்றார்.

5. உறுதி மொழி எண்.394 / 2007:– "தூத்துக்குடியில் 3 ஆம் கேட்டினுடைய இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்காக மத்திய, மாநில அரசுகள் நிதி ஒதுக்கி டெண்டர்விடப்பட்டு அந்தப்பாலப் பணிகள் இதுவரை நடைபெறாத நிலை குறித்து"

தூத்துக்குடியில் 3 ஆம் கேட்டினுடைய இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியை பார்வையிட சென்ற குழுவினரை நெடுஞ்சாலைத் துறையின் கோட்டப் பொறியாளர் வரவேற்று கீழ்க்கண்டவாறு குழுவிற்கு விளக்கினார்.

தூத்துக்குடி–மதுரை சாலையில் கடவு எண்.485–ல் ஒரு மேம்பாலம் கட்டும் பணியானது இத்துறையின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறதென்றும், மாற்றுப் பாதையில் வாகனங்கள் செல்வதற்கும் இரயில்வே துறைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதென்றும், 1,114 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இந்தப் பணிகள் செய்யப்பட்டு வருகிறதென்றும் 30.06.2008–க்குள் பணி நிறைவடையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் குழு தூத்துக்குடியில் பக்கிள் ஓடைத் திட்டத்தை பார்வையிடச் சென்றது.

6. உறுதி மொழி எண்.176 / 2004 மற்றும் 511 / 2005 :– "தூத்துக்குடியில் பக்கிள் ஓடை திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவது குறித்து"

தூத்துக்குடியில் பக்கிள் ஓடை திட்டத்தை பார்வையிடச் சென்ற குழுவினரை தூத்துக்குடி நகராட்சி ஆணையர் வரவேற்று கீழ்க்கண்டவாறு குழுவிற்கு விளக்கினார்.

தூத்துக்குடி நகரின் மத்தியில் ஓடும் பக்கிள் ஓடையை சீரமைத்து இருபுறமும் சாலைகள் அமைக்கவும், பூங்காக்கள் மற்றும் பாலங்கள் மற்றும் அபிவிருத்திகளை மேற்கொள்ள தொழில்நுட்ப ஆலோசகர் நியமனம் செய்ய நகரமன்ற தீர்மானம் இயற்றி அதன் அடிப்படையில் பக்கிள் ஓடை சீரமைக்கும் பொருட்டு திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிருவாக ஆணையருக்கு அனுப்பப்பட்டதில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் "வில்பர்ட் சுமித்" என்ற நிறுவனத்தை கன்சல்டென்டாக நியமித்து உத்தரவிடப்பட்டது என்றும் இறுதி திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதென்றும் இதிலே 9 கி.மீ. தூரத்தில் 5 கி.மீ. தூரம் தூத்துக்குடி நகராட்சிப் பகுதி எல்லையில் வருகிறதென்றும், ரூ.42 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டதில் 17.12.2007 அன்று நடைபெற்ற திட்ட விளக்க கூட்டத்தில் சில மாறுபாடுகளைச் செய்ய சொல்லப்பட்டதென்றும் 12 மீட்டர் அகலம்

என்பதை 7 மீட்டராக குறைக்கச் சொல்லப்பட்டதில் தற்போது அதற்கான திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றதென்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த உறுதிமொழியை நிறைவேற்றுவது சம்பந்தமாக துறைச் செயலாளர் அவர்களையும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களையும் சென்னையில் நடைபெறும் கூட்டத்தில் அழைத்து ஆய்வு செய்து விரைந்து இந்தப் பணியை தொடங்க தமிழக அரசுக்கு குழு பரிந்துரைச் செய்யும் என்று குழுத் தலைவர் தெரிவித்தார்.

7. உறுதிமொழி எண்.95 / 2007:– "சாத்தான்குளம் தொகுதி செய்துங்கநல்லூரில் காவலர் குடியிருப்பு கட்டுவதற்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் நடப்பு நிதியாண்டில் குடியிருப்பு கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து."

சாத்தன்குளம் தொகுதி, செய்துங்கநல்லூரில் காவலர் குடியிருப்பு கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்தைப் பார்வையிடச் சென்ற குழுவினரை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் வாயிலாக கீழ்க்கண்டவாறு குழுவிற்கு விளக்கினார்.

செய்துங்கநல்லூரில் காவல் நிலைய காவலர்களுக்கு காவலர் குடியிருப்பு கட்டுவதற்கும் விட்டியாபுரம் கிராமத்தில் 1.495 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டு காவல் துறைக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் நிலமாற்றம் செய்து தரப்பட்டுள்ளதென்றும், காவலர் வீட்டுவசதி கழகத்தின் மூலம் நிதிமற்றும் நிருவாக ஒப்பளிப்பு வழங்கக்கோரி காவல்துறை இயக்குநருக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதென்றும் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

2007 ஆம் ஆண்டு உறுதிமொழியாக இருந்தாலும் அதற்கு முன்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை துறைத் தெரிவித்துள்ளது. இது குறித்து குழு சென்னையில் கூட்டம் நடைபெறும்போது உள்துறைச் செயலாளர் அவர்களையும், காவல்துறை இயக்குநர் அவர்களையும் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் இயக்குநர் அவர்களையும், நேரில் அழைத்து நீண்ட நாள் தேவையான காவலர் குடியிருப்பு கட்ட நிதி ஒதுக்கீடு செய்து பணிகளை விரைந்து தொடங்க குழு பரிந்துரை செய்யும் என்று குழுத் தலைவர் தெரிவித்தார்.

8. உறுதி மொழி எண்.233 / 2005:– "விருதுநகர் மாவட்டம் சிவகாசி அரசினர் மருத்துவமனையில் "தீக்காயம் சிகிச்சைப் பிரிவு" கட்டிடம் கட்டுவது குறித்து".

குழு சிவகாசி அரசு மருத்துவமனையை அடைந்தவுடன் சுகாதாரத் துறை இணை இயக்குநர் டாக்டர் திருமதி கோமதி, மற்றும் மருத்துவ அலுவலர் டாக்டர் சுரேஷ் ஆகியோர் குழுவினரை வரவேற்றனர். மருத்துவமனையை பார்வையிட்ட குழுவினர் கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

சிவகாசியில் தீக்காயப் பிரிவு 12 படுக்கை வசதிகளுடன் 22.5 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது என்றும் மருத்துவமனையிலுள்ள படுக்கைகள், மெத்தை விரிப்புகள் பழுதடைந்துள்ளதால் அவற்றின் மூலமாக நோயாளிகளுக்கு நோய் பரவக்கூடிய அபாயம் உள்ளதெனவும், மருத்துவமனையில் உள்ள விளக்குகள், மின்விசிறிகள் சரியாக இயங்கவில்லை என்றும் மருத்துவமனை வளாகத்தில் புல் பூண்டுகள் அதிகமாக மண்டிக் கிடக்கின்றன என்றும் தெரிவித்தனர். இதற்கு அம்மருத்துவமனையின் மருத்துவ அலுவலர்கள் படுக்கை விரிப்புகள் தலையணைகளை, மாற்ற நிதியும் அனுமதியும் கோரி மருத்துவப் பணிகள் இயக்குநருக்கு கடிதங்கள் எழுதப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

சென்னையில் குழு கூட்டம் நடைபெறும்போது சிவகாசி மருத்துமனையில் உள்ள மெத்தைகள், விரிப்புகள், தலையணைகளை மாற்றுவதற்கு தேவையான நிதியை விடுவிக்க வேண்டுமென்று துறைச் செயலாளர் மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் ஆகியோர்களை நேரில் அழைத்து பரிந்துரை செய்யும் என்றார்.

மேலும், நோயாளிகள் நலநிதி என்று ரூ.1 இலட்சம் தரப்படுவதை மருத்துவமனைக்கு தேவையான அதாவது மின் விளக்குகள், மின் விசிறிகள் ஆகியவற்றை பழுதுபார்க்கவும் குழு உத்தரவிட்டது. மேற்படி பணியை உதவி செயற்பொறியாளர் உடனடியாக செய்துவிட்டு அதைப் புகைப்படம் எடுத்து குழுவிற்கு அனுப்ப வேண்டும் என குழுக் கேட்டுக்கொண்டது. மருத்துவமனை வளாகத்தின் நகராட்சி ஊழியர்களைக் கொண்டு சுத்தம் செய்யும்படியும், சுத்தம் செய்யப்பட்டதற்கான

புகைப்படம் மாலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் காண்பிக்க வேண்டுமென்றும் நகராட்சி ஆணையரை குழுக் கேட்டுக்கொண்டது.

பின்னர் குழு அங்கிருந்து புறப்பட்டு ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை பார்வையிடச் சென்றது.

9. உறுதி மொழி எண்.508 / 2005:– "ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை" 6 கோடி ரூபாய் செலவில் புனரமைப்பது குறித்து.

குழு ஆலங்குளத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தை அடைந்தவுடன் நிறுவனத்தின் துணைப் பொது மேலாளர் (பொறுப்பு) திரு.சந்திரசேகரன், குழுவை வரவேற்று கீழ்க்கண்டவாறு விளக்கினார்.

ஆலையை பார்வையிட்டபோது அங்கு பூமியிலிருந்து கண்ணாம்பு கற்கள் எடுக்கப்பட்டு அவைகள் உடைக்கும் இயந்திரத்தின் மூலம் பெரிய போல்டர்களாக உள்ளதை சிறிய துண்டுகளாக உடைக்கப்பட்டு அவை சிலரி மிக்ஸர் பேஷினில் கலக்கப்படுவதாகவும், அதன்பின் கில்லனில் போட்டு கெமிக்கல் சேர்த்து பிராஸஸ் செய்யப்பட்டு கிளிங்கர்களாக வெளிவருவதாக தெரிவிக்கப்பட்டது. பிறகு நிலக்கரியை கொண்டு 1100 டிகிரி வெப்பத்தில் அவை காட்டப்பட்டு பிறகு கூலர் மூலம் குளிர்விக்கப்படுவதாகவும் 95% கிளிங்கர், 5% ஜிப்சம் சேர்ந்ததுதான் தூய்மையான சிமெண்ட் என்று தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக குழுத் தலைவர் கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்:–

சிமெண்ட் ஆலை ஆரம்ப காலத்தில் 1200 டன் சிமெண்ட உற்பத்திதான் செய்து வந்ததாகவும் தற்சமயம் 800 டன் சிமெண்ட தான் உற்பத்திச் செய்ய படுவதாகவும் தெரிவித்துள்ளனர். இந்த ஆலையில் உள்ள இயந்திரங்களை பழுதுபார்க்க 6 கோடி ரூபாய் நிதி கேட்டு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதில் தமிழ்நாடு

அரசு முதற்கட்டமாக ரூ.2 கோடி தந்ததாகவும் அவற்றில் சூளையில் 24.8 முழு நீள செல் புதியதாக வாங்கி பொருத்தப்பட்டுள்ளதாகவும் சிலரி மிக்ஸற்குத் தேவையான உதிரி பாகங்கள் பழுதடைந்து டம்பர்களை சீரமைப்பதற்கு தேவையான உதிரி பாகங்கள் கொள்முதல் ஆணை பிறப்பிக்கப்பட்டு அவை எதிர்பார்க்கப்படுவதாக குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. தற்சமயம் கடைபிடிக்கப்படும் ஈரப்பத முறையிலிருந்து உலர்ப்பத முறைக்கு ஆலையை மாற்றினால் 1200 டன் சிமெண்ட் உற்பத்தி செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

சென்னையில் குழு கூட்டம் நடக்கும்போது தொழில்துறை செயலாளர் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஆகியோரை குழு முன் நேரில் அழைத்து இது பற்றி விரிவாக ஆய்வு செய்து அந்த 4 கோடி ரூபாயை விரைவில் விடுவிப்பதற்கு அரசுக்கு குழு பரிந்துரை செய்யும் என்றார்.

10. உறுதி மொழி எண்.403 / 2006:– "விருதுநகரில் பாதாள சாக்கடைத் திட்டம்" செயல்படுத்துவது குறித்து.

விருதுநகர் பாதாள சாக்கடைப் பணிகள் நடைபெறும் பகுதியை அடைந்த குழுவினரை விருதுநகர் நகராட்சி ஆணையர் வரவேற்று கீழ்க்கண்டவாறு குழுவிற்கு விளக்கினார்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரூ.23.25 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறதென்றும் 60 சதவிகிதப் பணிகள் முடிவு பெற்றுள்ளதென்றும் ஜூன் 2008–க்குள் அனைத்துப் பணிகளும் முடிவடையும் என தெரிவிக்கப்பட்டது. ஆறு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

2038 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் 8 இன்ஜ் முதல் 14 இன்ஜ் வரை விட்டமுள்ள குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன என்றும் இயற்கையான அழுத்தத்தில்

கழிவுநீர் வெளியேறும் வகையில் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

குழு இன்றைக்குக் காலையிலிருந்து சில இடங்களை ஆய்வு செய்தபோது விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்து சீரழிந்த நிலையில் உள்ளன. அனைத்து சாலைகளுமே பழுதுபார்க்கப்பட வேண்டும் என்றும் உடனடியாக இந்த சாலைகளை சீர் செய்ய நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்த சாலைகளை சீர் செய்ய உடன் நிதியொதுக்கம் செய்ய தமிழக அரசுக்கு அரசு உறுதிமொழிக் குழு பரிந்துரை செய்கிறது என குழுத் தலைவர் தெரிவித்தார்.

மேலும் சென்னையில் குழுக்கூட்டம் நடைபெறும்போது நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயலாளர் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஆகியோரை குழு நேரில் அழைத்து ஆய்வு செய்யும் என குழுத் தலைவர் தெரிவித்தார்.

11. உறுதிமொழி எண். 585 / 2006:–"விருதுநகர் அரசு தலைமை மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள நோய் கண்டறியும் மையத்திற்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் செயல்பட வைப்பது குறித்து"

குழு விருதுநகர் அரசு மருத்துவமனையை அடைந்தவுடன் குழுவை மருத்துவமனையின் கண்காணிப்பாளர் திருமதி சகுந்தலா மற்றும் பொதுப்பணித் துறையின் செயற்பொறியாளர் ஆகியோர் குழுவை வரவேற்று மருத்துவமனையில் உள்ள எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க ஏற்படுத்தப்பட்டுள்ள கூட்டு மருந்து சிகிச்சை மையம், நோய் கண்டறியும் மையம், புற நோயாளிகள் பிரிவு, பிரசவ வார்டு, இரத்த பரிசோதனை நிலையம் ஆகிய பகுதிகளுக்கு அழைத்து செல்லப்பட்டது.

பின்னர் குழுவிற்கு கீழ்க்கண்டவாறு விளக்கப்பட்டது.

மருத்துவமனைக்கு ஒரு நாளைக்கு 2000 பேர் புறநோயாளிகள் வருவதாகவும் 14 டாக்டர்கள் மற்றும் 42 செவிலியர்கள் பணியில் இருப்பதாகவும் பராமரிப்புத் தொகை ஒவ்வொரு ஆண்டும் 40 இலட்சம் தரப்படுவதாகவும், நோயாளிகள் நலநிதி 1 1/2 இலட்சம் ரூபாய் இருப்பதாகவும் அங்கு ஒரு புற நோயாளிகள் பிரிவு கட்டிடம் கட்ட 289 இலட்ச ரூபாய் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

மருத்துவமனையை பார்வையிட்டபோது மருத்துவமனையில் மிகவும் மோசமான நிலையிலிருந்த மெத்தைகளையும், தலையணைகளையும், விரிப்புகளையும் உடனே மாற்ற நடவடிக்கை எடுக்கும்படி இணை இயக்குநர் அவர்களை குழு கேட்டுக்கொண்டது. நகராட்சி துப்புரவு பணியாளர்களை கொண்டு மருத்துவமனையை மாஸ்கிளினிங் செய்து மருத்துவமனையை சுற்றிலும் சுத்தமான முறையில் பராமரிக்கப்பட வேண்டும் என குழு கேட்டுக்கொண்டது.

12. உறுதி மொழி எண். 855 / 2003 & 390 / 2006 :– "மதுரை மாவட்டம், மதுரை 1,2,3,4,5 ஆகிய வார்டுகளில் பாதாளச் சாக்கடை கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பது குறித்து"

மதுரையில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை துரிதப்படுத்துவது சம்பந்தமாக வார்டு 72–இல் நடைபெறும் பாதாள சாக்கடைப் பணிகளை பார்வையிடச் சென்ற குழுவினை மாநகராட்சி ஆணையர், மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளர் ஆகியோர் குழுவினை வரவேற்று கீழ்க்கண்ட தகவல்களை குழுவிற்கு அளித்தனர்.

மதுரை மாநகராட்சியில் 2003 ஆம் ஆண்டு 70.25 கோடி செலவில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் தொடங்கப்பட்டது என்றும் தற்போது 98 சதவீகிதப் பணிகள் முடிவடைந்துள்ளது என்றும் எஞ்சியப்பணிகள் மார்ச் 2008–க்குள் முடிவடையும் என்றும் சில பகுதிகளில் குறைபாடுகள் இருப்பது கண்டறியப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்ய அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாகவும், மாநகராட்சி ஆணையர் குழுவிடம் தெரிவித்தார்.

பாதாள சாக்கடைப் பணிகளை பார்வையிடலுக்குப் பின் குழுத் தலைவர் தெரிவித்தாவது:–

2008 ஆம் ஆண்டு ஜீன் மாதத்திற்குள் பாதாள சாக்கடை திட்டம் நிறைவடைந்து அமலுக்கு வந்துவிடும் என குழுவின் முன் தெரிவிக்கப்பட்டுள்ளது. சில பகுதிகளில் குறைபாடுகள் இருப்பது கண்டறியப்பட்டு, நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க அறிவுரை வழங்கியதாக ஆணையர் தெரிவித்தார். இப்பணிகளை அப்போதைக்கப்போது ஆய்வு செய்து பதிக்கும் குழாய்கள் தரமானதாக உள்ளனவா என்றும் இரண்டு பக்கமும் மண் சரியாக கொட்டுகிறார்களா என்பதை ஆய்வு செய்ய வேண்டும் என்றும் மேலும் குறைபாடுகள் கண்டறியப்பட்டால் அந்த ஒப்பந்ததாரர்மீது நடவடிக்கை எடுக்க குழு கேட்டுக்கொள்கிறதென்றும் பாதாள சாக்கடைத் திட்டம் முழுமையாக முடிவுற்ற பின்னர் அதற்கான அறிக்கையை குழுவிற்கு அனுப்பப்பட வேண்டுமென்றும் குழுத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

13. உறுதி மொழி எண். 132 / 2005 & 604 / 2005 :– "மதுரை, அலங்காநல்லூரில் செயல்படாமல் இருக்கும் சர்க்கரை ஆலையை இயக்குவது குறித்து"

அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையை சென்றடைந்த குழுவை ஆலையின் தனி அலுவலர் (பொறுப்பு) குழுவினை வரவேற்று கீழ்க்கண்டவாறு குழுவிற்கு விளக்கினார்.

இந்த தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை 1961 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு, 1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது என்றும், முதலில் 1000 டன் அரைக்கும் திறன் கொண்டதாக வடிவமைக்கப்பட்டது என்றும், 1977 ஆம் ஆண்டு 1500 டன் அரைக்கும் திறன் கொண்டதாகவும், 1987 ஆம் ஆண்டு முதல் 2500 டன் அரைக்கும் திறன் கொண்டதாகவும் இதன் திறன் உயர்த்தப்பட்டது என்றும், 100 சதவிகித அரவைத் திறனை எட்ட வேண்டுமென்றால் 4,30,000 மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யப்பட வேண்டும் என்றும் 1994–95 ஆம் ஆண்டுதான் அந்த அளவுக்கு கரும்பு அரவை செய்யப்பட்டது என்று தெரிவித்தார். நடப்பாண்டில் 4.38 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்துள்ளோம் என்றும் வருகிற ஆண்டில் 4.50 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்ய உத்தேசித்துள்ளோம் என்றார். மேலும், 2006–2007 ஆம் ஆண்டிற்கான குவிந்த நட்டம் 134 கோடியாக உள்ளது என்றும் வணிகக் கடனே 18 கோடி ரூபாய் அளவிற்கு உள்ளது என்றும் மத்திய கூட்டுறவு வங்கியில் வாங்கிய கடனுக்கான வட்டிச்சுமை நாளுக்குநாள் அதிகரித்து கொண்டே வருகிறது என்றார்.

அலங்காநால்லூர் சர்க்கரை ஆலையை பார்வையிட்டபோது தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.மூர்த்தி அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்களும் உடன் இருந்தனர். இந்த ஆலைக்கு என தனி அலுவலர் வேண்டுமென கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதால் நிரந்தரமாக இந்த ஆலைக்கென ஒரு தனி அலுவலரை நியமிக்க குழு அரசுக்கு பரிந்துரை செய்கிறது என்றும், மேலும் நட்டத்தில் இயங்கும் இந்த ஆலையை இலாபகரமாக இயக்க கோ.ஜெனரேசன் எனப்படும் உற்பத்தியை செய்திட அரசு அனுமதியளிக்க குழு அரசுக்கு பரிந்துரை செய்கிறது.

ஏனென்றால் அவ்வகையான அனுமதி தனியார் ஆலைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளதால் தனியார் ஆலைகள் இலாபகரமாக இயங்குகிறது என்றும் அதேபோல் எத்தனால் தயாரிப்பதற்கும் அரசு அனுமதியளிக்க வேண்டுமென்று குழு கேட்டுக்கொள்கிறது என்றும், மேலும் விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய 7,000 கோடி ரூபாய் அளவு கடனை இரத்து செய்து விவசாயிகள் வயிற்றில் பால் வார்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்குரிய கடனையும் முழுவதுமாக இரத்து செய்து விவசாயிகள் வாழ்க்கைக்கு ஒரு பாதுகாப்பு அளிக்க உதவிசெய்திட வேண்டுமென்று குழு அரசுக்கு பரிந்துரை செய்கிறது என்றார். மேலும், கரும்பு விவசாயிகள் ஆலைக்கு பல கோடி ரூபாய் கடன் இருப்பதாகவும் அந்த கடனை அரசே ஏற்றுக்கொண்டால் எதிர்காலத்தில் ஆலை இலாபகரமாக இயங்க ஏதுவாக இருக்கும் என சட்டமன்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தற்கு இணங்க One time payment என்கிற முறையில் ஒரு தொகையை கொடுத்து இந்த ஆலையை இலாபகரமாக இயக்கிட அரசு உதவிட குழு பரிந்துரை செய்கிறது என குழுத் தலைவர் தெரிவித்தார்.

மேலும், குழு சென்னையில் கூடுகிறபோது துறைச் செயலாளர் மற்றும் சர்க்கரைத் துறை ஆணையர் மற்றும் இதர அதிகாரிகளை நேரில் அழைத்து பரிந்துரை செய்யும் என்றும் ஆலைக்கு வர வேண்டிய தொகையான ரூ.63 இலட்சத்தை ராஜ ஸ்ரீ சுகர்ஸ் நிறுவனத்திடமும் ரூ.17 இலட்சத்தை சக்தி சுகர்ஸ் நிறுவனத்திடமும் இருந்து பெற நடவடிக்கை எடுக்குமாறு அரசை குழு கேட்டுக்கொள்கிறது என்றார்.

14. உறுதி மொழி எண். 507 / 2005:– "மதுரை எல்லீஸ் நகரில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் பேருந்து நிலையம் அமைப்பது குறித்து"

பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பான இடத்தை பார்வையிடச் சென்ற குழுவை மதுரை மாநகராட்சி ஆணையர் மற்றும் இந்துசமய அறநிலையத் துறை இணை ஆணையர் குழுவை வரவேற்று கீழக்கண்டவாறு குழுவிற்கு விளக்கினார்.

மதுரை எல்லீஸ் நகரில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான 7.28 ஏக்கர் நிலத்தில் 2.03 ஏக்கர் நிலப்பரப்பளவில் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளதென்றும் அர்ச்சகர்களுக்கு 6 வீடுகள் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதென்றும் மேலும், 12 வீடுகள் கட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும், 1.89 ஏக்கர் நிலத்தில் பக்தர்கள் தங்கும் விடுதி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றும், மேலும் இங்கு திருமண மண்டபம் ஒன்றும் கட்டப்பட உள்ளது என்றும் அதனால் பேருந்து நிலையம் அமைக்க இடம் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

குழு இந்த இடத்தை ஆய்வு செய்தபோது பலஆண்டு காலமாக இந்த பிரச்சனை இருந்துகொண்டிருப்பதாக தகவல் தெரிவிக்கப்பட்டது. மேலும், இந்துசமய அறநிலையத் துறை இணை ஆணையர் கோயில் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்ட இருப்பதாகவும் இதற்கான வரைபடமும் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது என்றும் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாநகராட்சி துணை மேயர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த இடத்தில் திருமண மண்டபம் அமைந்தால் நன்றாக இருக்கும் என்று கருத்து தெரிவித்தையடுத்து இந்துசமய அறநிலையத் துறைக்கு சொந்தமான இடத்தில் கோயில் பணியாளர்களுக்கு குடியிருப்புகள், மற்றும் திருமண மண்டபம் கட்டுவதுதான் நியாயமாக குழுவிற்கு தெரிகிறது என்றார்.

குழு சென்னையில் கூடும்போது இரண்டு செயலாளர்களையும் அழைத்து இந்த இடத்தில் பேருந்து நிலையம் கட்டுவது குறித்து உறுதிமொழியை கைவிடுவது குறித்து ஆய்வு செய்யும் என குழுத் தலைவர் தெரிவித்தார்.

15. உறுதி மொழி எண். 477 / 2006:– " மதுரை மாவட்டத்தில் மூன்றாவது நெசவு பூங்கா தொடங்குவது குறித்து"

மதுரை மாவட்டத்தில் மூன்றாவது நெசவு பூங்கா தொடங்குவது குறித்து இடத்தை பார்வையிட சென்ற குழுவை கைத்தறி, துணிநூல் துறை, உதவி இயக்குநர், மக்கள் தொடர்பு அலுவலர் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கம் ஆகியோர் வரவேற்றார்கள். கீழ்க்கண்ட தகவல்கள் குழுவிற்கு அளிக்கப்பட்டன.

மத்திய அரசின் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டத்தின்கீழ் மதுரையில் ஜவுளிப் பூங்கா அமைக்க மார்ச் 2007–ல் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. வாடிப்பட்டியில் இந்தப் பூங்காவினை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 87.88 கோடி மதிப்பீட்டில் அமைந்துள்ள இப்பூங்காவிற்கு மத்திய அரசு 35 கோடி ரூபாய் மானியமாக அளித்துள்ளதென்றும் கிட்டதட்ட 4 ஆயிரம் பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும், 112 ஏக்கரில் இந்தப் பூங்கா அமையவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

நெசவுப் பூங்கா அமையவுள்ள இடத்திற்கு நிலம் கொடுத்த ஏழைகளுக்கு வேலை கொடுக்க துறை ஒப்பந்தம் செய்திருக்க வேண்டும் என்றும், அவ்வாறு செய்யவில்லை என்று சொல்லப்படுகிறது. அதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு கேட்டுக்கொள்கிறது என்றும், வேலை வாய்ப்பில் நிலம் கொடுத்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும், மேலும் எவ்வளவு ரூபாய்க்கு ஏற்றுமதி செய்ய முடியும் என்பதை கணித்து குழுவிற்கு அறிக்கை அனுப்ப வேண்டுமென்றும் குழு கேட்டுக்கொள்கிறது என்றார்.

16. உறுதி மொழி எண். 754 / 2006:– "மதுரை மாவட்டத்தில் கிராம அளவில் தரமான, தூய்மையான பால் உற்பத்திக் கொள்முதல் திட்டம் செயல்படுத்துவது குறித்து."

ஆவின் பால்பண்ணையை குழு அடைந்த உடன் ஆவின் பொது மேலாளர் குழுவை வரவேற்றார். மேலும் குழு பார்வையிடலின்போது கீழ்க்கண்ட தகவல்கள் பெறப்பட்டன.

டி.கிருஷ்ணாபுரம், மேலதிருமாணிக்கம், பேரையூர், வண்டப்புலி பெருங்காமநல்லூர், உத்தமநாயக்கனூர் கோப்பம்பட்டி, பெருமாள் கோவில்பட்டி ஆகிய 8 இடங்களில் 5000 லிட்டர் கெப்பாசிட்டி கொண்ட குளிர்விப்பான்கள் மத்திய அரசின் நிதியுதவி மற்றும் ஒன்றியத்தின் பங்கும் சேர்ந்து 296.76 இலட்ச ரூபாயில் அமைத்து தருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்றும், 40 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் சிவில் ஒர்க் நடைபெற்று வருகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது.

எட்டு கிராமங்களில் பால் குளிர்விப்பான்கள் அமைக்க கட்டிடம் கட்டும் பணி தொடங்கப்பட்டு 4 மாதங்களில் முடிக்கப்படும் என ஆவின் பொது மேலாளரால் தெரிவிக்கப்படுகிறது. எனவே, இப்பணி முடிந்தவுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக குழுவிற்கு அறிக்கை ஒன்றை அனுப்பிவைக்குமாறு ஆவின் பொது மேலாளரை குழு கேட்டுக்கொள்கிறது என்றார்.

17. உறுதி மொழி எண். 894 / 2007:– "மதுரை அண்ணா பேருந்து நிலையம் அருகில் இராஜாஜி மருத்துவமனையின் கூடுதல் கட்டிடங்கள் கட்டப்படுவது குறித்து"

குழு அந்த இடத்தை அடைந்தவுடன் மருத்துவமனையின் முதல்வர் திருமதி ராஜி மற்றும், பொதுப்பணித் துறையின் செயற்பொறியாளர் ஆகியோர் குழுவை வரவேற்று கீழ்க்கண்ட தகவல்களை குழுவிற்கு அளிக்கப்பெற்றன.

மதுரை அண்ணா பேருந்து நிலையம் அருகில் இராஜாஜி மருத்துவமனைக்கு 300 படுக்கை வசதிகளுடன் கூடிய கூடுதல் கட்டிடம் 22.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்ட 02.07.2007 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்றும் தொழில்நுட்ப அனுமதி வந்தவுடன் மேற்படிக் கட்டிடப்பணி 3 மாதங்களில் தொடங்கும் என பொதுப்பணித் துறையின் செயற்பொறியாளர் தெரிவித்தார்.

பணி தொடங்கியவுடன் குழுவிற்கு அறிக்கை அனுப்ப வேண்டும் என குழு கேட்டுக்கொண்டது.

அரசு இராஜாஜி மருத்துவமனையில் லித்தோடிரிப்ஸ் எனப்படும் சிறுநீரகத்தில் ஏற்படும் கற்களை நீக்கும் கருவி நிறுவப்பட்டிருப்பதை குழு ஆய்வு செய்தது. இத்திட்டத்திற்கு ரூ.150 இலட்சம் ஒதுக்கப்பட்டதில் கட்டிடத்திற்கு 63 இலட்சமும், இரண்டு ஊர்திகளுக்கு 18 இலட்சமும், உபகரணங்களுக்காக 68 இலட்சமும் தகவல் தொடர்புக்காக 1 இலட்சமும் செலவழிக்கப்படும் என குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. சனவரி 2008–க்குள் கட்டிடப்பணி முடிவடையும் என தெரிவிக்கப்பட்டது. மேலும் இருதய நோயாளிகள் பிரிவிற்கு 1 கோடியே 8 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறதென்றும் நான்கு விதமான கருவிகள் வாங்குவதற்கு மருத்துவச் சேவை கழகத்திடமிருந்து உத்தரவு வந்திருக்கிறதென்றும் இன்னும் 1 வாரத்தில் அக்கருவிகள் நிறுவப்படும் என பொறியாளர்கள் தெரிவித்தனர்.

இருதய நோயாளிகள் பயன்படும் வகையில் வாங்கப்பட்ட நான்கு வகையான கருவிகளை உடனடியாக நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சென்னை ஸ்டான்லி மருத்துவமனை மேம்படுத்த 120 கோடி ரூபாய் மத்திய அரசு வழங்கியது போல் மதுரை தோப்பூரில் இடம் உள்ளது அங்கு மிக உயர்ந்த தரம் வாய்ந்த சிறப்பு பகுதிகளுடன் மருத்துவமனை அமைக்க 120 கோடி ரூபாய் கேட்டு மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மத்தியில் தமிழ்நாட்டை சார்ந்த திரு.அன்புமணி இராமதாஸ் அவர்கள்தான், சுகாதாரத்துறை அமைச்சராக உள்ளார். அவர் இருக்கும்போதே மதுரைக்கு 120 கோடி ரூபாய் வாங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது என்றும் 1 நாளைக்கு 10,000 பேர் புற நோயாளிகளாக வரக்கூடிய இந்த மருத்துவமனையில் போதிய

கட்டில்கள் இல்லை. மேலும், மெத்தைகள், விரிப்புகள் மற்றும் தலையணைகள் பழுதடைந்து இருக்கின்றன. அவை வாங்கப்பட்டு 5 வருடங்கள் கூட ஆகவில்லை என்று மருத்துவமனையின் முதல்வர் தெரிவிக்கிறார். இது போன்ற நிகழ்வுகளில் மருத்துவமனையின் முதல்வரோ அல்லது இணை இயக்குநர் அவர்களோ மெத்தைகள், விரிப்புகள் மற்றும் தலையணைகளை மாற்றுவதற்கு அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று குழு அரசுக்குப் பரிந்துரை செய்கிறது என்றும் மருத்துவமனையின் பராமரிப்பு நிதியிலிருந்து மருத்துவமனைக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் மின்விளக்குகள், மின் விசிறி போன்றவற்றை வாங்கிக்கொள்ள பொதுப்பணித் துறையின் செயற்பொறியாளர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று குழு கேட்டுக்கொள்கிறது. அதேபோல மருத்துவமனையின் கழிவுகளை அகற்ற இணை இயக்குநருக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்றும் மருத்துவமனையைச் சுற்றிலும் உள்ள செடி, கொடிகள் மற்றும் குப்பைகள் ஆகியவற்றை அகற்றுவதற்கு மாநகராட்சி ஆணையர் அவர்கள் மாநகராட்சி ஊழியர்களை அனுப்பி சுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு கேட்டுக்கொள்கிறது என்றார்.

பொதுக் குறிப்புரைகள்

5. ஆய்வுப் பயணங்களின் போது நடைபெறும் குழுக் கூட்டங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட அளவிலான உயர் அதிகாரிகள் தவறாது கலந்து கொள்ள வேண்டும் எனக் குழு வலியுறுத்துகிறது.

6. அரசின் உறுதிமொழிகளை துறைகள் நிறைவேற்றுவதில் சில நேர்வுகளில் வருடக்கணக்கில் காலதாமதம் ஏற்படுகிறது. இத்தகைய காலதாமதங்கள் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும். துறையில் ஏற்படுகின்ற காலதாமதத்தினால், அரசின்

நடவடிக்கையின் பலன், உரிய நேரத்தில் மக்களுக்கு சென்றடைய தாமதம் ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர்கள் கொடுத்த உறுதிமொழிகள் மீது அரசுச் செயலாளர்களும், துறைத் தலைவர்களும், மாவட்ட ஆட்சியாளர்களும் உரிய காலத்தில் தக்க நடவடிக்கை எடுத்து அவற்றை நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனக் குழு வலியுறுத்துகிறது.

7. குழுவின் இவ்வறிக்கைக்கு 2008–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பெற்றது.

சென்னை–600 009.
29, ஏப்ரல் 2008.
சித்திரை, 17
திருவள்ளுவர் ஆண்டு 2039.

தி. வேல்முருகன்
தலைவர்
அரசு உறுதிமொழிக் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



தூத்துக்குடி மாவட்டம்

தூத்துக்குடியில் செவிலியர் பயிற்சிக் கல்லூரி அரசு சார்பாக அமைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	1
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	71 / 2003
4.	பொருள்	:	தூத்துக்குடியில் செவிலியர் பயிற்சிக் கல்லூரி அரசு சார்பாக அமைப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா	:	8631
	நாள்	:	25.03.2003
6.	உறுப்பினர் பெயர்	:	திருமதி எஸ். ராஜம்மாள்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வி அமைச்சர் ... ஆகவே தூத்துக்குடியில் மிக விரைவில் செவிலியர் பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செவிலியர் பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டு கடந்த 4 ஆண்டுகளாக செயல்பட்டு வருகின்றது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டபிடாரம் தொகுதி கழுகுமலை அரசு ஆதிதிராவிடர் மாணவர் இல்லத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	2
2.	துறையின் பெயர்	:	ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	76 / 2003
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், ஒட்டபிடாரம் தொகுதி கழுகுமலை அரசு ஆதிதிராவிடர் மாணவர் இல்லத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா	:	15139
	நாள்	:	25.03.2003
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. அ. சிவபெருமாள்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் ... ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்கு புதியதாக அரசு கட்டிடம் கட்டுவது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
8.	துறையின் பதில்	:	தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், கழுகுமலை அரசு ஆதிதிராவிடர் மாணவர் இல்லத்திற்கு புதிய அரசுக் கட்டிடம் கழுகுமலை கிராமம், சர்வே எண்.84/1பி2–ல் கட்டப்பட்டு இக்கட்டிடத்தில் அரசு ஆதிதிராவிடர் மாணவர் இல்லம் செயல்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பிணவறை ஒன்று கட்டுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	3
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	144 / 2003
4.	பொருள்	:	தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பிணவறை ஒன்று கட்டுவது குறித்து.
5.	2003–2004 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகளின் மீது மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	04.04.2003
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் ... தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ரூ.62 இலட்சம் மதிப்பீட்டில் பிணவறை ஒன்று கட்டப்படும்.
8.	துறையின் பதில்	:	தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரியில் ரூ.82 இலட்சம் மதிப்பீட்டில் பிணவறை ஒன்று கட்டி முடிக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நோய் கண்டறியும் மைய ஆய்வுக்கூடக் கட்டடம் கட்டுதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	4
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	147 / 2003
4.	பொருள்	:	தூத்துக்குடி மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நோய் கண்டறியும் மைய ஆய்வுக்கூடக் கட்டடம் கட்டுதல் குறித்து.
5.	2003–2004 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகளின் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	04.04.2003
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்
			... தூத்துக்குடி மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நோய் கண்டறியும் மைய ஆய்வுக்கூடக் கட்டடம் Central Diagnostic Centre ரூ.16.75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.
8.	துறையின் பதில்	:	தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ரூ.16.75 இலட்சம் மதிப்பீட்டில் நோய் கண்டறியும் மைய ஆய்வுக்கூடம் கட்டி முடிக்கப்பட்டு தற்போது உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டபிடாரம் தொகுதியில் வேளாண் விளைபொருள் சேமிப்பு கிடங்கு கட்டுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	5
2.	துறையின் பெயர்	:	வேளாண்மைத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	261 / 2003
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், ஒட்டபிடாரம் தொகுதியில் வேளாண் விளைபொருள் சேமிப்பு கிடங்கு கட்டுவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா	:	15184
	நாள்	:	11.04.2003
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. அ. சிவபெருமாள்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத்துறை அமைச்சர்
			... மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கையை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
8.	துறையின் பதில்	:	ஒட்டப்பிடாரம் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் ஒட்டப்பிடாரம் அருகில் கடம்பூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வேளாண் விளைபொருள் சேமிக்க போதுமான இட வசதி உள்ளது. ஆனால் விவசாயிகள் முன் வருவதில்லை. ஆகவே, அந்த வசதிகளை பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், இப்பகுதி வறட்சிக்கு இலக்காகும் பகுதியாக இருப்பதால் சேமிப்புக்கிடங்கு ஏற்படுத்தி விளைபொருட்கள் சேமித்து வைக்கும் அளவிற்கு விளைபொருள் உற்பத்தி அதிகம் இல்லை. இப்பகுதியில் விற்பனைக்கூடத்திற்கு சொந்தமான இடம் இல்லை. புதியதாக இடம் வாங்கி சேமிப்புக்கிட்டங்கி அமைப்பதால் அக்கிட்டங்கி முழு அளவில் உபயோகிப்பாளர்களால் பயன்படுத்தும் நிலையில் இல்லை. இதனால் இத்திட்டத்தில் செலவிடப்படும் தொகையினால்

விவசாயிகளுக்குப் பயனேதும் ஏற்படாதது மட்டுமல்ல, விற்பனைக் குழுவிற்கும் இதனால் நிதி இழப்பு ஏற்படும் நிலை உள்ளது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 18.12.2007

10. குழுவின் கருத்து : படித்துப் பதிவு செய்யப்பட்டது.



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம், எட்டயபுரம், கோவில்பட்டி, பருவக்குடி சாலையில் 45 / 2–6 முதல் 48 / 2–50, 2.80 கி.மீ. சாலையை மராமத்து செய்து தார்ச் சாலை போடுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	6
2.	துறையின் பெயர்	:	நெடுஞ்சாலைத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	681 / 2003
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம், எட்டயபுரம், கோவில்பட்டி, பருவக்குடி சாலையில் 45 / 2–6 முதல் 48 / 2–50, 2.80 கி.மீ. சாலையை மராமத்து செய்து தார்ச் சாலை போடுவது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா	:	15796
	நாள்	:	10.05.2003
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. சோ. இராஜேந்திரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் ... திட்டப் பணிகளுக்கு ஒதுக்கப்படும் நிதி நிலைமைகளுக்கு ஏற்ப பழுதடைந்த சாலைப் பகுதிகளை சீர் செய்து தார்ச்சாலை அமைத்திட தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	அரசு மாநில சாலையான பருவக்குடி–கோவில்பட்டி எட்டையாபுரம்–விளாத்திகுளம்–வேம்பார் சாலையில் கி.மீ. 41/0–56/1 முடிய 15.10 கி.மீ. நீளத்திற்கு (கோவில்பட்டி முதல் எட்டையாபுரம் வரை) 2004–05–ம் ஆண்டிற்கான மத்திய சாலை நிதியின்கீழ் (Central Road Fund) ரூ.250.00 லட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்படுத்தப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் தாலுக்கா நம்பிபுரம் கண்மாய்க்கு நீர்வரத்தை அதிகரிக்க வைப்பாற்றில் கீழ் நாட்டுக்குறிச்சி அருகே அணைக்கட்டு கட்டப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	7
2.	துறையின் பெயர்	:	பொதுப்பணித்துறை
3.	உறுதிமொழி எண்.	:	794 / 2003
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் தாலுக்கா நம்பிபுரம் கண்மாய்க்கு நீர்வரத்தை அதிகரிக்க வைப்பாற்றில் கீழ் நாட்டுக்குறிச்சி அருகே அணைக்கட்டு கட்டப்படுவது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா	:	18082
	நாள்	:	10.05.2003
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. சோ. இராஜேந்திரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் ... நிதி நிலைமைக்கேற்ப செய்யப்படும்.
8.	துறையின் பதில்	:	தூத்துக்குடி மாவட்டம், எட்டயாபுரம் வட்டம், நம்பிபுரம் கண்மாய்க்கு நீர்வரத்தினை அதிகரிக்க நம்பிபுரம் பாசன ஆயக்கட்டுதாரர்கள் வேண்டுகோளுக்கு இணங்க நல்லி உப்பாற்றின் குறுக்கே அணைக்கட்ட மதிப்பீடு ரூ.113.85 லட்சங்களுக்கு நபார்டு நிதி உதவி பெற்று வேலை செய்து முடிக்கப்பட்டு விட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் தொகுதி, வேம்பாரில் இறால் பண்ணை அமைத்தல் குறித்து.

1.	வரிசை எண்.	:	8
2.	துறையின் பெயர்	:	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	810 / 2003
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் தொகுதி, வேம்பாரில் இறால் பண்ணை அமைத்தல் குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா	:	26921
	நாள்	:	10.05.2003
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. என்.கே. பெருமாள்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத்துறை அமைச்சர்
			... அந்த விண்ணப்பத்தினை மாவட்டக் குழு, மாநிலக் குழு மற்றும் நீர்வாழ் உயிரின ஆணையத்தின் பரிசீலனைக்குப் பின் அனுமதி வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	இறால் பண்ணைகளை கடல்சார் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் முறைப்படி பதிவு செய்ய தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை பெருந்தலைவராகக் கொண்ட மாவட்ட அளவுக் குழு உறுப்பினர்களின் ஆய்வறிக்கையின் பரிந்துரையின் பேரில் மாநில அளவுக் குழுவிற்கு அனுப்பி அதன் அடிப்படையில் இறால் பண்ணை அமைக்க உரிமம் வழங்கப்படும்.
			கடல்சார் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு மாவட்ட மற்றும் மாநில அளவுக் குழுவின் ஆய்வறிக்கையின் பேரில், இறால் பண்ணைக்கு உரிமம் வழங்கப்படும்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப் பதிவு செய்யப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் வருவாய் ஆய்வாளர் குடியிருப்பைப் பழுதுபார்த்தல் குறித்து.

1.	வரிசை எண்.	:	9
2.	துறையின் பெயர்	:	வருவாய்த் துறை
3.	உறுதிமொழி எண்.	:	829 / 2003
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் வருவாய் ஆய்வாளர் குடியிருப்பைப் பழுதுபார்த்தல் குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா	:	27866
	நாள்	:	03.11.2003
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. சோ. இராஜேந்திரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் ... பணி முன்னுரிமை அடிப்படையில் நிதி நிலையைப் பொறுத்து மேற்கொள்ளப்படும்.
8.	துறையின் பதில்	:	2003-2004-ம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டில் தூத்துக்குடி மாவட்டம், எட்டையாபுரம் வருவாய் ஆய்வாளர் குடியிருப்பில் உள்ள அனைத்து பழுதுபார்க்கும் பணிகளும் சரிசெய்யப்பட்டு வருவாய்த் துறை ஆய்வாளரிடம் குடியிருப்பு ஒப்படைக்கப்பட்டுவிட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் தொகுதியில் மின் அழுத்தக் குறைவினைத் தடுத்திட 110 கி.வா. துணை மின் நிலையங்கள் அமைத்தல் குறித்து.

1.	வரிசை எண்.	:	10
2.	துறையின் பெயர்	:	எரிசக்தித்துறை
3.	உறுதிமொழி எண்.	:	880 / 2003
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் தொகுதியில் மின் அழுத்தக் குறைவினைத் தடுத்திட 110 கி.வா. துணை மின் நிலையங்கள் அமைத்தல் குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா	:	31641
	நாள்	:	03.11.2003
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. என்.கே. பெருமாள்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்துறை அமைச்சர் ... அ) ஆம். ....ஆ) மின் வாரிய பத்தாவது திட்ட காலம் பகுதி–3 இல் (2003–2007) நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு துணை மின் நிலையம் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்ட மதிப்பீடு சுமார் ரூ.635 இலட்சங்கள்.
8.	துறையின் பதில்	:	மின்வாரிய பத்தாவது திட்ட காலம் பகுதியில் (2003–07) அடங்கிய விளாத்திக்குளத்தில் 110 கி.வோ. துணைமின் நிலையம் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு மேற்படி விளாத்திக்குளம் துணைமின் நிலையம் 29.09.2005 அன்று இயக்கி வைக்கப்பட்டு விளாத்திக்குளம் தொகுதியில் மின்னழுத்த குறைகள் நிவிர்த்தி செய்யப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், நவதிருப்பதி, காயல்பட்டினம் மற்றும் தெய்வ செயல்புரத்தில் அடிப்படை கட்டமைப்பு ஏற்படுத்துதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	11
2.	துறையின் பெயர்	:	செய்தி மற்றும் சுற்றுலாத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	43 / 2004
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், நவதிருப்பதி, காயல்பட்டினம் மற்றும் தெய்வ செயல்புரத்தில் அடிப்படை கட்டமைப்பு ஏற்படுத்துதல் குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா துணை வினா	:	8632
	நாள்	:	10.02.2004
6.	உறுப்பினர் பெயர்	:	திருமதி. எஸ். ராஜம்மாள்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்
			... தூத்துக்குடி மாவட்டம், நவதிருப்பதி ஆலய இடங்களில் ரூ.48.75 இலட்சம் மதிப்பீட்டிலும், தெய்வ செயல்புரத்தில் ரூ.19 இலட்சம் மதிப்பீட்டிலும், காயல்பட்டினம் கடற்கரையில் ரூ.30 இலட்சத்திலும் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.
8.	துறையின் பதில்	:	அ) தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம் நவதிருப்பதி தலங்களில் ஸ்ரீவைகுண்டம் நகரில் மொத்தம் 7 பணிகள் ரூ.16,66,704/- செலவிலும், நத்தம் கிராமத்தில் மொத்தம் 5 பணிகள் ரூ.12,00,010/- செலவிலும், ஸ்ரீவைகுண்டம் நகர பஞ்சாயத்து செயல் அலுவலரால் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. அதுபோன்று திருப்புளியங்குடி கிராமத்தில் 2 பணிகள் ரூ.8,74,856/- செலவிலும், இரட்டை திருப்பதியில் 4 பணிகள் ரூ.10,48,980/- செலவிலும், ஸ்ரீவைகுண்டம் ஊராட்சி ஒன்றிய ஆணையராலும் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பணிகள் சுற்றுலாத்துறை நிதி ரூ.24,37,000/- மற்றும்

சிறுசேமிப்பு ஊக்கத்தொகை ரூ.23,53,550/– ஆக மொத்தம் ரூ.47,90,550/– செலவில் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டுச் சான்றிதழும் மாவட்ட ஆட்சியரால் 18.01.2007–ல் வழங்கப்பட்டுள்ளது.

ஆ. காயல்பட்டினம் கடற்கரை அபிவிருத்தி சம்பந்தமான 7 பணிகள் ரூ.29,47,824/– செலவில் காயல்பட்டினம் நகராட்சி செயல் அலுவலரால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட பணிகள் சுற்றுலாத்துறை நிதி ரூ.15,00,000/– சிறுசேமிப்பு ஊக்கத்தொகை ரூ.10,00,000/– மற்றும் காயல்பட்டினம் நகராட்சி நிதி ரூ.4,47,824/– ஆக மொத்தம் ரூ.29,47,824/– செலவில் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டு சான்றிதழும் மாவட்ட ஆட்சியரால் 21.09.2007–ல் வழங்கப்பட்டுள்ளது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 18.12.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஊட்டச்சத்து மையங்களில் பணியாற்றும் ஊழியர்களின் காலி பணியிடங்கள் நிரப்பப்படுவது குறித்து.

1. வரிசை எண். : 12

2. துறையின் பெயர் : சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை

3. உறுதிமொழி எண். : 103 / 2004

4. பொருள் : தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஊட்டச்சத்து மையங்களில் பணியாற்றும் ஊழியர்களின் காலி பணியிடங்கள் நிரப்பப்படுவது குறித்து.

5. உடுக்குறியிட்ட வினா துணை வினா : 16415

நாள் : 13.02.2004

6. உறுப்பினர் பெயர் : திருமதி. எஸ். ராஜம்மாள்

7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி : மாண்புமிகு திருமதி. பா.வளர்மதி, சமூக நலத்துறை அமைச்சர்

... காலிப் பணியிடங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக தெரிவிக்கின்றபோது உடனடியாக அந்தக் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

8. துறையின் பதில் :

	அங்கன்வாடி பணியாளர்	அங்கன்வாடி உதவியாளர்
மொத்த உபரி பணியாளர்கள்	54	16
உபரி பணியாளர்கள் பணியிட மாறுதல் மூலமாக காலி பணியிடங்கள் நிரப்பப்பட்டது	54	16
அரசாணை: 88–ன் படி நேர்முக தேர்வின் மூலம் காலி	60	248

பணியிடங்கள் நிரப்பப்பட்டது (15.5.07–ன்படி)		
அரசாணை:4–ன் படி நேர்முகத் தேர்வின் மூலம் இம்மாத இறுதியில் காலிப் பணியிடங்கள் நிரப்ப உள்ள விவரம்	34	120

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 18.12.2007

10. குழுவின் கருத்து : படித்துப் பதிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 180 கிலோவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி இயந்திரம் வழங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	13
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	147 / 2004
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 180 கிலோவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி இயந்திரம் வழங்கப்படுவது குறித்து.
5.	2004-2005 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	26.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே ரூ.15.00 இலட்சம் செலவிலே 180 கி.வாட் திறன் கொண்ட மின் உற்பத்தி இயந்திரம் வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 180 கி.வாட் திறன் கொண்ட மின்உற்பத்தி இயந்திரம் நிறுவப்பட்டு மார்ச் 2005 முதல் இயங்கி வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கட்டாய உள்ளுறை பயிற்சியாளர் குடியிருப்பு கட்டப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	14
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	148 / 2004
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கட்டாய உள்ளுறை பயிற்சியாளர் குடியிருப்பு கட்டப்படுவது குறித்து.
5.	2004–2005 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	26.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	–
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.150 இலட்சம் செலவிலே கட்டாய உள்ளுறை குடியிருப்பு கட்டப்படும்.
8.	துறையின் பதில்	:	தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ150 இலட்சம் மதிப்பீட்டில் கட்டாய உள்ளுரை பயிற்சியாளர் குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டு பயிற்சியாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மகளிருக்காக கூடுதல் மாணவியர் விடுதி கட்டப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	15
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	149 / 2004
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மகளிருக்காக கூடுதல் மாணவியர் விடுதி கட்டப்படுவது குறித்து.
5.	2004–2005 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	26.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	–
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
			... தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே ரூ.160 இலட்சம் மொத்த செலவிலே மகளிருக்காக கூடுதல் மாணவியர் விடுதி கட்டப்படும்.
8.	துறையின் பதில்	:	தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ160 இலட்சம் மதிப்பீட்டில் மாணவியர்களுக்காக கூடுதல் மாணவியர் விடுதி கட்டப்பட்டு மாணவியர் பயன்படுத்தி வருகின்றனர்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	16
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	150 / 2004
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படுவது குறித்து.
5.	2004–2005 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	26.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	–
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
			... தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே ரூ.11.00 இலட்சம் மொத்த செலவிலே தீவிர சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	அரசு ஆணை (நிலை) எண்.267 H&FW நாள்: 03.08.2004–ல் ரூ.11 லட்சம் ஒதுக்கப்பட்டது. இதன்படி தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் மூலம் கீழ்க்கண்ட உபகரணங்கள் வாங்கப்பட்டு தீவிர சிகிச்சை பிரிவு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

உபகரணங்கள் விபரம்:

1. Defibrillator -2 Nos - Rs.1,45,130/-
2. Suction Apparatus -1No -Rs. 5,001/-
3. Ventilator -1No -Rs.5,91,882/-
4. Infusion Pump -4Nos -Rs.1,35,400/-
5. Treadmill -1 No - Rs.1,75,000/-
6. Computerised ECG Machine -1No -Rs. 47,500/-

Total Rs. 10,99,913/-

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 18.12.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் புதியம்புத்தூர் அல்லது குறுக்குச் சாலையில் மீன் பதப்படுத்தும் நிலையம் மற்றும் கடலுணவு தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல் குறித்து.

1.	வரிசை எண்.	:	17
2.	துறையின் பெயர்	:	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	212 / 2004
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் புதியம்புத்தூர் அல்லது குறுக்குச் சாலையில் மீன் பதப்படுத்தும் நிலையம் மற்றும் கடலுணவு தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல் குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா	:	15154
	நாள்	:	29.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.அ. சிவபெருமாள்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர் ... இதுபற்றி அமைப்பதற்கான முடிவுகள் ஆய்வு செய்யப்படும்.
8.	துறையின் பதில்	:	மீன்துறையின் மூலம் ஏற்கனவே இயங்கி வந்த பனிக்கட்டி நிலையங்கள் மற்றும் மீன்பதனிடும் தொழிற்சாலைகள் சரிவர இயங்காத காரணத்தால் மூடப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் 11 தனியார் நிறுவனத்தார் மீன் பதனிடும் தொழிற்சாலைகளும் 23 தனியார் நிறுவனங்கள் பனிக்கட்டி நிலையங்களும் நடத்தி வருகிறார்கள். எனவே, இம்மாதிரி தொழிற்சாலை இப்பகுதியில் அமைத்தால் அது அரசுக்கோ அல்லது மக்களுக்கோ முழுமையான முறையில் பயனளிக்காது என தெரிவிக்கப்படுகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப் பதிவு செய்யப்பட்டது

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் 110 கி.வாட் மின் அழுத்த நிலையம் அமைத்தல் குறித்து.

1.	வரிசை எண்.	:	18
2.	துறையின் பெயர்	:	எரிசக்தித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	254 / 2004
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் 110 கி.வாட் மின் அழுத்த நிலையம் அமைத்தல் குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா துணை வினா	:	41283
	நாள்	:	30.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.என்.கே.பெருமாள்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின் துறை அமைச்சர் ... அவசியம் இருந்தால் வருங்காலத்தில் நிச்சயமாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம் 110 கி.வோல்ட் மின் அழுத்த துணை மின் நிலையம் அமைக்க ஏற்கனவே நிலம் கையகப்படுத்தப்பட்டு 110 கி.வோல்ட் துணை மின் நிலையம் நிறுவப்பட்டு 29.09.2005 அன்று இயக்கி வைக்கப்பட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் இந்திய கெண்டை மீன் விந்தணுக்கள் குளிர் பதனிடும் ஆய்வுக்கூடம் நிறுவப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	19
2.	துறையின் பெயர்	:	கால்நடை பராமரிப்பு , பால்வளம் மற்றும் மீன்வளத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	274 / 2004
4.	பொருள்	:	தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் இந்திய கெண்டை மீன் விந்தணுக்கள் குளிர் பதனிடும் ஆய்வுக்கூடம் நிறுவப்படுவது குறித்து.
5.	2004–2005 ஆம் ஆண்டுக்கான கல்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	30.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ப.வே. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்
			... இந்திய கெண்டை மீன்களின் மீன் குஞ்சு உற்பத்தியை பெருக்குவதற்கு மீன் விந்தணுக்கள் குளிர்பதனிடும் ஆய்வுக்கூடம் ஒன்று 17.51 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.
8.	துறையின் பதில்	:	தமிழ்நாடு அரசு பகுதி II திட்டத்தின் கீழ் 2004–2005 வருடத்தில் ரூ.17.51 இலட்சம் நிதி இந்தியப் பெருங்கெண்டை மீன்களின் விந்தணுக்களை குளிர்பதனம் செய்யும் ஆய்வுக்கூடம் அமைக்க பெறப்பட்டது.
			இத்திட்டத்தின் நிதி உதவியால் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மீன்வளர்ப்புத் துறையில் விந்தணுக்களை குளிர்பதனம் செய்யும் ஆய்வுக்கூடம் நிறுவப்பட்டு அதன் தொடர்பான ஆய்வுகள் தொடர்ச்சியாக

17.09.2004 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இந்த ஆராய்ச்சியின் மூலம்,

1) கட்லா, ரோகு மற்றும் மிர்கால் மீன்களின் விந்தணுக்கள் குளிர்பதனம் செய்யப்பட்டு, அந்த விந்தணுக்களின் வீரியம் மற்றும் நகரும் தன்மை ஆகிய குணங்கள் கண்டறியப்பட்டன.

2) இதன் மூலம் ஒரு பயிற்சி நடத்தப்பட்டு 10 மீன்வள தொடர்புடையோர் பயிற்சியளிக்கப் பட்டுள்ளனர்.

3) இதுவரை ரூ.16.35 இலட்சம் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதில் ரூ.13.75 இலட்சம் நிதி தொடர செலவினங்களுக்கான ஆய்வுக்கூடம் மற்றும் பிற ஆய்வக கருவிகளுக்கும், ரூ.2.60 இலட்சம் செலவின வகையிலும் செலவு செய்யப்பட்டுள்ளது.

4) இத்திட்டத்தின் மூலம் தொடங்கப்பட்ட ஆராய்ச்சி வழியாக ஏறத்தாழ 500 மீன்குஞ்சு உற்பத்தியாளர்கள் நேரடியாகவும், 50,000 நன்னீர் மீன் வளர்ப்பாளர்கள் மறைமுகமாகவும் பயன் பெறுவர் என்றும் நம்பப்படுகிறது.

5) இத்திட்டத்தின் ஆராய்ச்சி இந்தியப் பெருங்கெண்டை மீன்களின் குஞ்சு உற்பத்தியை உயர்த்தும் நோக்கில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 18.12.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், சிந்தலக்கரை பாசனக் கண்மாயைப் பழுதுபார்த்தல் குறித்து.

1.	வரிசை எண்.	:	20
2.	துறையின் பெயர்	:	பொதுப்பணித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	397 / 2004
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், சிந்தலக்கரை பாசனக் கண்மாயைப் பழுதுபார்த்தல் குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா	:	27840
	நாள்	:	31.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.சோ. இராஜேந்திரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் ... சிந்தலக்கரை பாசனக் கண்மாய் பழுதுபார்த்து நவீனப்படுத்தும் திட்டம் நபார்டு நிதி உதவியுடன் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
8.	துறையின் பதில்	:	நபார்டு வங்கி உதவியுடன் இப்பணி அரசு ஆணை எண்.406, பொதுப்பணித் துறை, நாள்: 23.06.2004 ஒப்புதல் பெற்று பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு விட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், வைப்பாற்றில் நல்லி உப்போடை கலக்கும் இடத்தில் அணைக்கட்டு கட்டி நம்பிபுரம் பாசனக் கண்மாய்க்கு தண்ணீர் திருப்பி விடுதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	21
2.	துறையின் பெயர்	:	பொதுப்பணித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	399 / 2004
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், வைப்பாற்றில் நல்லி உப்போடை கலக்கும் இடத்தில் அணைக்கட்டு கட்டி நம்பிபுரம் பாசனக் கண்மாய்க்கு தண்ணீர் திருப்பி விடுதல் குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா	:	31001
	நாள்	:	31.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.சோ. இராஜேந்திரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் ... ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சாத்தியக்கூறு இருப்பின் செயலாக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	வைப்பாற்றில் நல்லி உப்போடையில் நம்பிபுரம் கிராமத்தில் அணைக்கட்டு கட்டும் பணிகள் நபார்டு வங்கி உதவியுடன் அரசு ஆணை எண்.406, பொதுப்பணித் துறை, நாள்: 23.06.2006, ஒப்புதல் பெற்று பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு விட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் இரண்டு இரயில்வே மேம்பாலப் பணிகளை விரைந்து முடிப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	22
2.	துறையின் பெயர்	:	நெடுஞ்நாலைத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	108 / 2005
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் இரண்டு இரயில்வே மேம்பாலப் பணிகளை விரைந்து முடிப்பது குறித்து.
5.	2005–2006 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது விவாதம்	:	
	நாள்	:	07.05.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.சோ. இராஜேந்திரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் ... அந்தப் பணியை விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
8.	துறையின் பதில்	:	1. கோவில்பட்டி நகராட்சி எல்லையில் மதுரை – கன்னியாகுமரி சாலை கி.மீ.94/2–ல் இரயில்வே கடவு எண்.440–க்கு பதிலாக ஒரு இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி முடிவடைந்து போக்குவரத்திற்கு திறக்கப்பட்டது. 2. கோவில்பட்டி நகராட்சி எல்லையில் மதுரை – கன்னியாகுமரி சாலை கி.மீ.91/4–ல் இரயில்வே கடவு எண்.437–க்கு பதிலாக ஒரு இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி முடிவடைந்து போக்குவரத்திற்கு திறக்கப்பட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்தி குளம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத் தேர் ஓடுவதற்கு ஆவன செய்தல் குறித்து.

1.	வரிசை எண்.	:	23
2.	துறையின் பெயர்	:	தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	112 / 2005
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்திலுள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத் தேர் ஓடுவதற்கு ஆவன செய்தல் என்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	19832
	துணை வினா		
	நாள்	:	08.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.என்.கே. பெருமாள்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்
			... வருகின்ற சித்திரை மாதத்தில் தேர் ஓட்டப்படும்
8.	துறையின் பதில்	:	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு ஆலய மேம்பாட்டு நிதி ரூ.10 இலட்சம் மற்றும் பொதுமக்கள் நன்கொடை ரூ.2.30 இலட்சம் ஆக மொத்தம் ரூ.12.30 இலட்சம் செலவில் புதிய திருத்தேர் செய்யப்பட்டு கடந்த 22.04.2005, 08.05.2006 மற்றும் 29.04.2007 ஆகிய தேதிகளில் சிறப்பாக தேரோட்டம் நடைபெற்றுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPH

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி சிவன் கோவிலுக்குச் சொந்தமான தேரின் 4 சக்கரங்களை புதியதாக அமைத்தல் குறித்து.

1.	வரிசை எண்.	:	24
2.	துறையின் பெயர்	:	தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	113 / 2005
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதியில் சிவன் கோவிலுக்குச் சொந்தமான தேரின் 4 சக்கரங்களை புதியதாக அமைத்தல் குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	19832
	நாள்	:	08.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.அ. சிவபெருமாள்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் ... புகுப்பிக்கப்படும்
8.	துறையின் பதில்	:	அருள்மிகு விஸ்வநாதசாமி திருக்கோயில் திருத்தேருக்கு இத்துறை ஆணையர் பொது நல நிதியிலிருந்து ரூ.1,75,275/- செலவில் திருச்சி பாரத மிகுமின் நிறுவனம் மூலமாக நான்கு இரும்பு சக்கரங்கள் பொருத்தப்பட்டு திருப்பணி முடித்து கடந்த 27.05.2007-ல் தேரோட்டம் சிறப்பாக நடத்தப்பட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தூத்துக்குடியில் கூட்டுறவு பட்டயப் பயிற்சிப் பள்ளி தொடங்குவது குறித்து.

1.	வரிசை எண்.	:	25
2.	துறையின் பெயர்	:	கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	296 / 2005
4.	பொருள்	:	தூத்துக்குடியில் கூட்டுறவு பட்டயப் பயிற்சிப் பள்ளி தொடங்குவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	19575
	துணை வினா		
	நாள்	:	29.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திருமதி.எஸ். ராஜம்மாள், திரு. அ. சிவபெருமாள்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. வீ. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்
			... தொடங்குவதற்கான முயற்சியில் ஈடுபடப்படும்
8.	துறையின் பதில்	:	தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டம் இரண்டிற்கும் சேர்த்து திருநெல்வேலியில் மேடைத்தளவாய் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் என்ற பெயரில் கூட்டுறவு பயிற்சி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. தற்போது கூட்டுறவு பட்டயப் பயிற்சியில் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கு மாணவர்களிடையே போதிய ஆர்வம் இல்லாத நிலை காணப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு இரண்டு மாவட்டங்களிலும் குறைவான எண்ணிக்கையில்தான் மாணவர்கள் சேர்ந்து கூட்டுறவு பட்டயப்பயிற்சி பெற்றுள்ளனர்.
			2004–2005 104 நபர்கள் 2005–2006 17 நபர்கள் 2006–2007 45 நபர்கள்
			மாணவர்களிடையே கூட்டுறவு பட்டயப் பயிற்சியில் சேர்வதற்கு போதிய ஆர்வமின்மையின் காரணமாக தூத்துக்குடி மாவட்டத்திற்கு தனியாக ஒரு கூட்டுறவு பட்டயப் பயிற்சி நிறுவனம் தேவையில்லை எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப் பதிவு செய்யப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகரில் உள்ள நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	26
2.	துறையின் பெயர்	:	பள்ளிக் கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	452 / 2005
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகரில் உள்ள நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	40577
	நாள்	:	13.04.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. சோ. இராஜேந்திரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் ... அரசு நடவடிக்கை எடுக்கும்
8.	துறையின் பதில்	:	கோவில்பட்டி நகரில் உள்ள நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு 16.07.2007 அன்று உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டு நூலகம் தற்போது சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஸ்ரீ காசி விசுவநாத திருக்கோயில் உள்ள தேரின் நான்கு சக்கரங்களையும் இரும்புச் சக்கரங்களாக அமைத்தல் குறித்து.

1.	வரிசை எண்.	:	27
2.	துறையின் பெயர்	:	தமிழ் வளர்ச்சிப் பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	98 / 2006
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஸ்ரீ காசி விசுவநாத திருக்கோயில் தேரின் நான்கு சக்கரங்களையும் இரும்புச் சக்கரங்களாக அமைத்தல் குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	71218
	நாள்	:	23.01.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. அ. சிவபெருமாள்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் ... பதுப்பித்து தேர் ஓட்டப்படும்
8.	துறையின் பதில்	:	அருள்மிகு விஸ்வநாதசாமி திருக்கோயில் ஸ்ரீ காசி விஸ்வநாத திருக்கோயில்) திருத்தேருக்கு இத்துறை ஆணையர் பொது நல நிதியிலிருந்து ரூ.1,75,275/- செலவில் திருச்சி பாரத மிகு மின் நிறுவனம் மூலமாக நான்கு இரும்பு சக்கரங்கள் பொருத்தப்பட்டு திருப்பணி முடித்து கடந்த 27.05.2007-ல் தேரோட்டம் சிறப்பாக நடத்தப்பட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளத்திலிருந்து ஜெகவீரபுரம் வரை இயங்கிய தடம் எண்.7 பேருந்து மீண்டும் இயக்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	28
2.	துறையின் பெயர்	:	போக்குவரத்துத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	270 / 2006
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளத்திலிருந்து ஜெகவீரபுரம் வரை இயங்கிய தடம் எண்.7 பேருந்து மீண்டும் இயக்கப்படுவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	761
	துணை வினா		
	நாள்	:	04.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. பொ. சின்னப்பன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. கா.ந. நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்
			... தொடர்ந்து ஓட்டுவதற்கு உரிய முயற்சி எடுக்கிறோம்.
8.	துறையின் பதில்	:	விளாத்திகுளத்திலிருந்து ஜெகவீரபுரம் வரை தடம் எண்.7, எனும் நகரப் பேருந்து இயக்கப்பட்ட வழித்தடமான விளாத்திக்குளம் – காடல்குடி – சின்னூர் –ஜெகவீரபுரம் என்ற வழித்தடத்தில், தடம் எண்.எம்.83, எனும் புறநகர் வழித்தடப் பேருந்து மூலம் 12.05.2007 முதல் 4 சுற்றுக்கள் இயக்கப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உறுதிமொழி நிறைவேற்றப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி துறை ஆராய்ச்சி நிலையத்தின் மீன் உணவு தயாரிப்பில் மூலப் பொருளுடன் புரதச் சத்து சேர்த்து கழி நண்டுகளை கொழுக்க வைத்து தீவனம் தயாரிக்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	29
2.	துறையின் பெயர்	:	கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	792 / 2006
4.	பொருள்	:	தூத்துக்குடி துறை ஆராய்ச்சி நிலையத்தின் மீன் உணவு தயாரிப்பில் மூலப் பொருளுடன் புரதச் சத்து சேர்த்து கழி நண்டுகளை கொழுக்க வைத்து தீவனம் தயாரிக்கப்படுவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை – மீன்வளம் மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	19.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்
			... ரூ.1 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் கழி நண்டுகளை கொழுக்க வைத்து தேவையான தீவனம் தயாரிக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	நண்டுகளை கொழுக்க வைக்க ஆராய்ச்சியின் அடிப்படையில் புரதசத்து மிகுந்த தேவையான அளவு தரமான திரி உணவு தயார் செய்யப்பட்டு, ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டு, மகளிர் சுய உதவிக் குழுவிற்கு வழங்கப்படுகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்திலுள்ள வ.உ.சி. இல்லம் பராமரித்தல் குறித்து.

1.	வரிசை எண்.	:	30
2.	துறையின் பெயர்	:	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	1068 / 2006
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்திலுள்ள வ.உ.சி. இல்லம் பராமரித்தல் குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான செய்தி மற்றும் சுற்றுலாத்துறை – செய்தி மற்றும் விளம்பரம் மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	28.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ... பராமரிக்க நிதி ஒதுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம் அவர்களுக்கு ரூ.50,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒட்டப்பிடாரத்திலுள்ள வ.உ.சி. இல்லம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்தது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம் எட்டையபுரத்திலுள்ள பாரதியார் மணிமண்டபம் பழுது நீக்குதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	31
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி அறநிலையம் மற்றும் செய்தித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	1069 / 2006
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம் எட்டையபுரத்திலுள்ள பாரதியார் மணிமண்டபம் பழுது நீக்குதல் குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான செய்தி மற்றும் சுற்றுலாத்துறை – செய்தி மற்றும் விளம்பரம் மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	28.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ... பழுதுகள் நீக்கி மேம்பாடு செய்யப்படும்.
8.	துறையின் பதில்	:	செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம் அவர்களுக்கு ரூ.75,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, எட்டையபுரத்திலுள்ள பாரதியார் மணிமண்டபத்தில் பழுது நீக்கம் செய்யப்பட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டத்தில் கட்டாரங் குளத்திலுள்ள வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம் பராமரித்தல் குறித்து.

1.	வரிசை எண்.	:	32
2.	துறையின் பெயர்	:	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	1070 / 2006
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டத்தில் கட்டாரங் குளத்திலுள்ள வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம் பராமரித்தல் குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான செய்தி மற்றும் சுற்றுலாத்துறை – செய்தி மற்றும் விளம்பரம் மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	28.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ... பழுதுகள் நீக்கி பராமரிக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம் அவர்களுக்கு ரூ.75,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டாரங்குளத்திலுள்ள வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம் பராமரித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நிறைவடைந்தது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் தொகுதியில் மந்திகுளம் ஊராட்சியில் லக்கம்பட்டி, ஒ.லட்சுமி நாராயணபுரம், இலந்தைக்குளம் ஆகிய மூன்று கிராமங்களுக்கு தனியாக ஒரு நியாயவிலைக் கடை அமைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	33
2.	துறையின் பெயர்	:	பொதுப்பணித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	9 / 2007
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் தொகுதியில் மந்திகுளம் ஊராட்சியில் லக்கம்பட்டி, ஒ.லட்சுமி நாராயணபுரம், இலந்தைக்குளம் ஆகிய மூன்று கிராமங்களுக்கு தனியாக ஒரு நியாயவிலைக் கடை அமைப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	954
	நாள்	:	22.01.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. பொ. சின்னப்பன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத்துறை அமைச்சர் ... அரசு விதிகளுக்குட்பட்டு இருந்தால் கட்டாயம் அந்த பகுதியிலே கடைகள் திறக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	மேற்படி மூன்று கிராமங்களுக்கும் சேர்த்து இலந்தைக்குளத்தில் சிறப்பினமாகக் கருதி பகுதி நேர நியாயவிலைக் கடை அமைத்துத் தருமாறு இவ்வலுவலகக் கடிதம் நக.2412/2006 பொவிதி.2, நாள்: 11.08.2006 மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடிக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. இப்பிரேரணையானது மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடியின் கடிதம் நக.உ.பொ.4/38422/2006, நாள்:09.03.2007–ன்படி முதன்மை ஆணையாளர் மற்றும் ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னைக்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி அரசாணை (டி) எண்.373, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை (சிஏ 2) நாள்: 19.11.2007–ன்படி மந்திகுளம் நியாயவிலைக் கடையிலுள்ள 643 குடும்ப அட்டைகளிலிருந்து மேற்படி மூன்று கிராமங்களைச் சேர்ந்த 539

குடும்ப அட்டைகளைப் பிரித்து இலந்தைகுளத்தில் தாய் நியாயவிலைக்கடை அமைக்கவும், மந்திகுளத்தில் 104 குடும்ப அட்டைகளுடன் பகுதிநேர நியாயவிலைக் கடை செயல்படுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி இலந்தைக்குளத்தில் 14.12.2007 அன்று தாய்க்கடை ஆரம்பிக்கப்பட்டது. மந்திகுளத்திலுள்ள நியாயவிலைக் கடை பகுதிநேர நியாயவிலைக் கடையாகவும் செயல்பட்டு வருகிறது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 18.12.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி சென்னல்பட்டி முதல் முத்தாலங்குறிச்சி வரை உள்ள வடிகால்வாய்களை சீரமைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	34
2.	துறையின் பெயர்	:	பொதுப்பணித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	1083 / 2007
4.	பொருள்	:	தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி சென்னல்பட்டி முதல் முத்தாலங்குறிச்சி வரை உள்ள வடிகால்வாய்களை சீரமைப்பது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்	:	2390
	நாள்	:	09.05.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திருமதி ராணி வெங்கடேசன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணி சட்டத்துறை அமைச்சர் ... நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	தாமிரபரணி ஆற்றின் 7–வது அணையாக மருதூர் அணைக்கட்டு அமைந்துள்ளது. இந்த அணைக்கட்டிலிருந்து மேலக்கால் வாய்க்கால் பிரிகிறது. மருதூர் மேலக்கால் வாய்க்காலின் நேரடி மடை எண்.4 முதல் 23 வரை உள்ள பாசன நிலங்களின் வடிகால் தண்ணீரும், குட்டைக்கால் குளம், முத்தாலங்குறிச்சி குளம் கொள்ளிவாய்குளம், நாட்டார்குளம், செய்துங்கநல்லூர் குளம் ஆகிய குளங்களின் பாசன நிலங்களிலிருந்து வடியும் வடிகால் தண்ணீரும் சேர்ந்து ஆலங்கால் வடிகாலில் வடிகிறது. இந்த ஆலங்கால் முத்தாலங்குறிச்சி வடிகால் வாய்க்காலில் உள்ள மண்மேட்டினையும், ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும், நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்த வடிகால் வாய்க்கால் தூர்வாரி சீரமைக்கப்பட்டுவிட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	18.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.



விருதுநகர் மாவட்டம்

விருதுநகர் மாவட்ட நீதிமன்றம் திருவில்லிபுத்தூரில் இயங்கி வருவதால் அங்கு ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்றக் கட்டடம் கட்டுதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	35
2.	துறையின் பெயர்	:	உள்துறை
3.	உறுதிமொழி எண்.	:	81 / 2003
4.	பொருள்	:	விருதுநகர் மாவட்ட நீதிமன்றம் திருவில்லிபுத்தூரில் இயங்கி வருவதால் அங்கு ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்றக் கட்டடம் கட்டுதல் குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	9987
	நாள்	:	26.03.2003
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. மா. இராஜசேகர்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் ... சென்னை உயர்நீதிமன்றம் அனுப்பிய முன்னுரிமைப் பட்டியலில் இத்திட்டம் இடம் பெற்றுள்ளது. மைய அரசிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டபின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
8.	துறையின் பதில்	:	அரசு ஆணை எண்.1006, உள்துறை (நீதிமன்றங்கள் 1.அ.) 18.10.2003-ன் படி ரூ.992/- லட்சம் செலவில் அத்திகுளம், செங்குளம் கிராம புல எண்.129 பகுதி என்ற நிலத்தில் திருவில்லிப்புத்தூர் சிவகாசி சாலையில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டப்பட்டு 28.01.2006 முதல் இயங்கி வருகின்றது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	19.12.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், நத்தகுளம் பகுதி, ஆனைக்குளம் பெரிய கண்மாயை ஆழப்படுத்துதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	36
2.	துறையின் பெயர்	:	பொதுப் பணித்துறை
3.	உறுதிமொழி எண்.	:	858 / 2003
4.	பொருள்	:	அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், நத்தகுளம் பகுதி, ஆனைக்குளம் பெரிய கண்மாயை ஆழப்படுத்துதல் குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்	:	30015
	நாள்	:	03.11.2003
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. கே.கே. சிவசாமி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் ... வரும் நிதியாண்டுகளில் தூர் எடுத்து சீரமைப்பது பற்றி கருத்தில் கொள்ளப்படும்.
